பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**03 03 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட்டுக்குப் பிந்தைய காணொலி கருத்தரங்கில் இன்று உரையாற்றுகிறார்.

2. தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள புத்தகங்கள், தமிழின் தொன்மையையும், பண்பாட்டு வளத்தையும் உலகறியச் செய்யும் முயற்சி என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. சுயசார்பு இந்தியாவை உருவாக்க, தொழில்நுட்ப வலிமை அவசியம் என்று ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

4. கீழடி, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிச்சனூர் உள்ளிட்ட 8 இடங்களில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5. ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி பர்மிங்ஹாமில் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பட்ஜெட்டுக்குப் பிந்தைய இணையவழி கருத்தரங்கில் இன்று உரையாற்றுகிறார்.

பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல் மற்றும் ஸ்திரமாக வைத்திருப்பது என்ற கருப்பொருளுடன் இந்தக் கருத்தரங்கு நடைபெற உள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதில் தொழிற்சாலை உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களை முன்னெடுத்துச் செல்வது குறித்தும், முக்கியமான துறைகளின் அடித்தளத்தை வலுப்படுத்துவதுடன், தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள புத்தகங்கள், தமிழின் தொன்மையையும், பண்பாட்டு வளத்தையும் உலகறியச் செய்யும் முயற்சி என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்ற தமிழறிஞர்களின் 14 தமிழ்ப் புத்தகங்கள் வெளியீட்டு விழாவில் தாம் பங்கேற்றது குறித்து சமூக வலைதளப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் மீது பிரதமர் கொண்டுள்ள ஆழ்ந்த பற்றையும், மரியாதையையும் மீண்டும் ஒருமுறை எடுத்துக்காட்டும் வகையில் இந்த புத்தகங்கள் வெளியீடு அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழறிஞர்கள், இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தின் மீது மத்திய அரசு வைத்துள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவும் புத்தக வெளியீடு அமைந்திருப்பதாக டாக்டர் எல். முருகன் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

சுயசார்பு இந்தியாவை உருவாக்க தொழில்நுட்ப வலிமை அவசியம் என்று ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தேசிய கல்விக் கொள்கை, புதுமை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப சிறப்புகளைக் கொண்டிருப்பதாக கூறினார்.

எதிர்கால இந்தியாவுக்கு தயாராகும் வகையில் கல்வியில் சீர்திருத்ங்களைக் கொண்டுவர இந்தக் கொள்கை வழிவகுக்கும் என்று அவர் கூறினார்.

வரும் 2047ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கவும், அதன் எழுச்சியை உலக நன்மைக்காக வடிவமைக்கவும் புதுமை கண்டுபிடிப்பு, முன்னணி தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி நாட்டின் தொழில்நுட்ப திறன்களை மீட்டெடுக்க வேண்டும் என்றும் திரு. ஆர்.என். ரவி வலியுறுத்தினார்.

<<<<>>>>

கீழடி, ஆதிச்சனூர் மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட 8 இடங்களில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தமது சமூக வலைதளப் பதிவில், இந்த திட்டங்கள் கடந்த ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டு தொல்பொருள் தலைமை இயக்குநர் தலைமையில்

நடந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டபோதிலும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை மட்டுமே அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ள முடியும் என்றும், அதன் பின்னர் பருவமழையால் களப்பணியை மேற்கொள்ள முடியாது என்றும் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தில்லி சென்ற அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி நேற்றிரவு பிஜேபி மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான திரு. அமித் ஷாவை சந்தித்துப் பேசினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள அஇஅதிமுக, கூட்டணிக் கட்சிகளுக்கு சட்டப்பேரவைத் தேர்தலில் தொகுதிகளை ஒதுக்குவது தொடர்பாக சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழகத்தில் மேம்படுத்தப்பட்ட 8 ரயில் நிலையங்களை பிரதமர் திரு. நரேந்திர

மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்டம் பும்மிடி ரயில் நிலையமும் இத்திட்டத்தின்கீழ் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டிருப்பதற்கு அப்பகுதியைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

**(Voice Byte - Dhandapani - 27 Sec)**

<<<<>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலைக்கு மத்தியில் **357** விமானங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதாக மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பிராந்தியத்தில் பயணிகளுக்கு ஏற்ற சூழல் தொடர்பான நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருவதாக சமூக வலைதளப் பதிவில் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயணிகள் உதவி கட்டுப்பாட்டு அறை மூலமாக விமானப் பயணிகளின் கோரிக்கைகள் கேட்டறியப்பட்டு வருவதாகவும், உரிய நேரத்தில் முன்னுரிமை அடிப்படையில் அவை தீர்க்கப்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஏர்சேவா என்ற சமூக ஊடக தளம் மூலமாக இதுவரை பயணிகளின் 559 கோரிக்கைகள் தீர்க்கப்பட்டிருப்பதாகவும், பிரத்யேக உதவி அழைப்பு எண்கள் மூலமாகவும் விமான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்தும் பயணிகளின் கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விமானங்கள் ரத்து மற்றும் நேர மாற்றம் தொடர்பான சரியான தகவல்களை விமான நிறுவனங்களின் அதிகாரபூர்வ தொலைபேசி எண்கள் மூலம் பயணிகள் அறிந்துகொள்ள வேண்டும் என்று விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று மாநில வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.

அங்கு ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக தமிழக அரசின் கட்டுப்பாட்டு அறைக்கு 974 பேர் உதவி கேட்டு தொடர்புகொண்டதாகவும், அவர்கள் தொழில் மற்றும் சுற்றுலாவுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்கள் என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டு தங்குமிடம், உணவு வசதி உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் மாசி மாத பௌர்ணமியை முன்னிட்டு லட்சக்கணக்கானோர் கிரிவலம் சென்றனர்.

இன்று மாலை வரை பௌர்ணமி நீடிப்பதால் தொடர்ந்து பக்தர்கள் குவிந்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Ravichandran — 32 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

ஈரானில் ராணுவ நடவடிக்கை எவ்வளவு காலம் தொடரும் என்று இப்போது தெரிவிக்க முடியாது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

--------------

மத்திய கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள மோதலைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் சிக்கித் தவிக்கும் பஞ்சாப் மாநில மக்களுக்கு உதவ

24 மணி நேர தொலைபேசி எண்களை அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

--------------

நடப்பாண்டில் பிப்ரவரி மாதம் வரையிலான காலத்தில் நாட்டின் நிலக்கரி உற்பத்தி 2 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.

--------------

தருமபுரி மாவட்டம் மொரப்பூர் சிலம்பம் வனப்பகுதியில் வனத்துறையினர் கண்காணிப்பு பணியின்போது பெண் யானை ஒன்று இறந்து கிடந்ததை கண்டறிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

--------------

கிருஷ்ணகிரி மாவட்டம் சின்னேபள்ளி கிராமத்தில் பாரம்பரிய எருதுவிடும் விழா நேற்று நடைபெற்றது.

--------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுமார் 13 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. காந்தி வழங்கினார்.

--------------

சிங்கப்பூரில் இருந்து கடத்தி வரப்பட்ட ஒன்றேகால் கோடி ரூபாய் மதிப்புடைய தங்கத்தை சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

--------------

இந்த ஆண்டின் முதல் சந்திரகிரகணம் இன்று மாலை மணி 4.45க்கு நிகழ்கிறது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

பர்மிங்ஹாமில் நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியாவின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**